# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS** 68/2013 } Plaintiff : PW

Deposition of Witness of } Defendant: DW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. கலைமணி | District | : | |
| Father name | : | திரு. முத்தையா | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சிவகங்கை மாவட்ட கல்வி , தனியார் பள்ளிகள் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். மாவட்ட கல்வி அலுவலர் (தனியார்பள்ளிகள்) எனக்கு அளித்த அனுமதி கடிதத்தின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி அனுமதி கடிதம் சாசா ஆ 1 ஆகும். எங்களது அலுவலகம் சிவகங்கையில் 01.10.2022 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அழைப்பாணையில் கேட்கப்பட்ட 2000-2026 வரையிலான சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் ராகினிப்பட்டியில் உள்ள சாம்பவிகா மேல் நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியின் அங்கீகார உத்தரவுகளின் அசல்கள் , சான்றிட்ட நகல்கள் கேட்கப்பட்டதில் எங்களது அலுவலகம் மூலமாக சாம்பவிகா தொடக்கப்பள்ளிக்கு 01.06.2025 முதல் 31.05.2028 காலக்கட்டத்திற்கு அங்கீகாரம் புதுப்பிப்பதற்கான அறிக்கை ஏற்கப்பட்டு வழங்கிய உத்தரவுகளின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது சாசா ஆ 2 ஆகும். சாம்பவிகா பள்ளியின் 6 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு 01.06.2023 முதல் 31.05.2026 காலக்கட்டத்திற்கு அங்கீகாரம் புதுப்பிப்பதற்கான அறிக்கை ஏற்கப்பட்டு வழங்கிய உத்தரவுகளின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது சாசா ஆ 3 ஆகும். மேற்படி காலகட்டதிற்கு முன்பு உள்ள

ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை. மேற்படி ஆவணங்கள் முதன்மைகல்வி அலுவலகம் , சிவகங்கை அலுவலகத்திலும் மாவட்ட கல்வி (தொடக்க கல்வி) அலுவலகத்திலும் உள்ளதால் மேற்படி ஆவணங்களை எங்களால் தாக்கல் செய்ய இயலவில்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.12 17:01:34 +0530